Regiestered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022    கார்த்திகை 14    (30 - 11 1991)    சனிக்கிழமை    ஓசை: 285

## அரச அதிபர் செய்தி தர மறுப்பு

கொழும்பிலிருந்து நேற்று மாலை யாழ்ப்பாணம் திரும்பிய அரசாங்க அதிபர் திரு க. மாணிக்கவாசகர் செயலகம் தொடர்பாகவும், மாவட்ட நிர்வாகம் தொடர்பாகவும் எமது பத்திரிகைக்கு செய்தி வழங்க மறுப்புத் தெரிவித்தார். அரசாங்க அதிபரை அவரது உத்தியோக பூர்வ வாசஸ் தலத்தில் நேற்று மாலை எமது செய்தியாளர்கள் சந்தித்தபோதே அரசாங்க அதிபர் இதனைத் தெரிவித்தார். யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது நிலவும் உணவுநெருக்கடி மற்றும் மாவட்டத்தின் அத்தியாவசிய தேவைகள் தொடர்பாக யாழ். செயலகத்தின் செயற்பாட்டில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டி செய்திகள், ஆசிரிய தலையங்கங்கள், விமர்சனங்கள் மற்றும் செயலக (4 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் கடும் மோதல்கள்;

# 14 படை பலி; 11 படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் நடந்த மோதல்களில் பதின் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், பதினொரு இராணுவத்தினர் படுகாயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இலுப்பை வெளி என்னும் இடத்தில் நிகழ்ந்த ஒரு மோதல் சம்பவத்தில் 12 படையினர் கொல்லப்பட்டனர். 11 பேர் படுகாயமடைந்துள்ளனர் என அறிவிக்கப்படுகின்றது. நேற்றுக்காலை ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலின்போதே இந்தஇழப்புக்கள் சிறிலங்கா இராணுவத்தரப்பிற்கு ஏற்பட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இரண்டாவது மோதல் சம்பவம் தேக்கம் தீவுப் பகுதியில் இடம்பெற்றதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. 'பக்கர் எலிய' (மதங்கொண்ட யானை) என்னும் இராணுவ நடவடிக்கை கிழக்கில் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக அறிவித்துள்ள சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் புலிகளின் முகாமை கைப்பற்ற முற்பட்டபோதே கடும் [4 ஆம் பக்கம் பார்க்க)

## புல்மோட்டையில் தாக்குதல்; இரு இராணுவம் பலி

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். இது மிதி வெடியுடன் கூடியசெயின் கைக்குண்டுத் தாக்குதலாகபுல் மோட்டையிலுள்ள பதினைந்தாம் கட்டைப் பகுதியில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது நேற்று நடத்தப்பட்டது.

## அரியாலை மீது நேற்றும் விமானக் குண்டு வீச்சு

### இருவர் காயம்; வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்கில் உள்ள குடியிருப்புகள் மீது இரண்டாவது நாளாக நேற்றும் சிறிலங்கா அரச படைகளின் குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதலைமேற்கொண்டன. இதனால் இருவர் படுகாய

வீச்சு விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

இதே வேளை பூநகரிப்பகுதியில் நிலை கொண்டுள்ள சிறி ( 3ஆம் பக்கம் பார்க்க),

## கண்மூடித்தனமாக தாக்குதல்

## ஆனையிறவில் மோதல்; இரு இராணுவம் பலி

ஆனையிறவு முகாம் பகுதியில் புதிய காவலரண் அமைக்க முற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலை புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுக்காலை 7.40 மணியளவில் ஆனையிறவுப் பகுதியில் அமைந்துள்ள புலிகளின் காவலரண் பகுதியை நோக்கி முன்னேறி வந்த இராணுவத்தினர் காவலரண் ஒன்றை அமைக்க முற்பட்டனர். அவ்வேளை அந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் பதுங்கித் தாக்கினர். (4 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் நடவடிக்கை; யாழ். அ. அதிபர் திருப்தி

(யாழ்ப்பாணம்)

அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளை அறிந்ததும் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திருப்தி தெரிவித்தார். இவ்வாறு கடந்த இருபத்திரண்டாம் திகதி கொழும்பில்நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் தயாரத்னா குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் பேசுகையில் மூன்று தினங்களுக்கு முன்பு கொழும்பில் யாழ். அரசாங்க அதிபர் இருந்ததாகவும், அப்போது உணவு தட்டுப்பாடு பற்றியும் கூறினாரெனவும் தெரிவித்தார். எனினும் அரசாங்கம் [4 ஆம் பக்கம் பார்க்க)

## தொழிலிழந்த மீனவருக்கு ஒருமாத உலர் உணவு

(யாழ்ப்பாணம்]

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் தொழில் இழந்த மீனவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவிருக்கின்றது.

இம்மாவட்டத்தில் உள்ள தொழில் பாதிக்கப்பட்ட சுமார் 5,000 மீனவ குடும்பங்களுக்கு மட்டும் ஆரம்பத்தில் ஒரு மாதம் தொடர்ச்சியாக வழங்கப்படும். இந்த நிவாரண நடவடிக்கையைத் தொடர்ந்து நிலைமைகளை (3 ஆம் பக்கம் பார்க்க)

## அரச சார்பற்ற நிறுவனம்; கப்பலில் இடமில்லை

வடபகுதிக்குக் கப்பல் மூலம் அத்தியாவசிய உணவுப் பொருள்களைத் தனியார் நிறுவனங்கள் அல்லது அரசசார்பற்ற நிறுவனங்கள் எடுத்து வருவதற்குக் கூட்டுப்படைகளின் தலைமையலுவலகம் முற்றாக அனுமதி மறுத்துள்ளது. (க.லோ)

## வடபகுதிக்கு மின்சாரம்; பொறியியல் ஆலோசனை

## தவறு

[நமது நிருபர்]

வவுனியா மாவட்டத்திலுள்ள மாமடு இராணுவக் காவலரண்கள் தகர்ப்பின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் வீரச்சாவு எய்தியவர் ஈஸ்வரன் (கால்மன்) (வேலுப்பிள்ளை புஸ்பநாதன் மகிழடித்தீவு, மட்டக்களப்பு) ஆகும். நேற்று இவரது பெயர் தவறுதலாக தீனன் என இடம் பெற்றுள்ளது.

## எறிகணைத் தாக்குதல்

[நமது நிருபர்]

வளர்காவற்றுறைப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் பொன்னாலை மற்றும் திருவடிநிழல் பகுதிகளை நோக்கிக் கடும் எறிகணைத் தாக்குதலை நடாத்தியுள்ளனர். ]4 ஆம் பக்கம் பார்க்க]

## விவசாயிகளுக்கு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் நடந்த மோதல்களில் பதின் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், பதினொரு இராணுவத்தினர் படுகாயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இலுப்பை வெளி என்னும் இடத்தில் நிழ்ந்த ஒரு மோதல் சம்பவத்தில் 12 படையினர் கொல்லப்பட்டனர். 11 பேர் படுகாயமடைந்துள்ளனர் என அறிவிக்கப்படுகின்றது. நேற்றுக்காலை ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலின்போதே இந்தஇழப்புக்கள் சிறிலங்கா இராணுவத்தரப்பிற்கு ஏற்பட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இரண்டாவது மோதல் சம்பவம் தேக்கம் தீவுப் பகுதியில் இடம்பெற்றதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. 'பக்கர் எலிய' (மதங்கொண்ட யானை) என்னும் இராணுவ நடவடிக்கை இழக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ள சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் புலிகளின் முகாமைக் கைப்பற்ற முற்பட்டபோதே கடும்

[4 ஆம் பக்கம் பார்க்க)

# புல்மோட்டையில் தாக்குதல்; இரு இராணுவம் பலி

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். இது மிதி வெடியுடன் கூடிய கைக்குண்டுத் தாக்குதலாகப் புல்மோட்டையிலுள்ள பதினைந்தாம் கட்டைப் பகுதியில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது நேற்று நடத்தப்பட்டது.

# அரியாலை மீது நேற்றும் விமானக் குண்டு வீச்சு

## இருவர் காயம்; வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்கில் உள்ள குடியிருப்புகள் மீது இரண்டாவது நாளாக நேற்றும் சிறிலங்கா அரச படைகளின் குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதலை மேற்கொண்டன. இதனால் இருவர் படுகாயமடைந்தனர் வீடுகள் சேதமடைந்தன.

நேற்று மாலை நாலுமணியளவில் அரியாலைப்பகுதியில் இரண்டு விமானங்கள் வட்டமிட மக்கள் குடியிருப்புகளை நோக்கி இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

இதே வேளை பூநகரிப்பகுதியில் நிலை கொண்டுள்ள சிறி

( 3ஆம் பக்கம் பார்க்க),

# கண்மூடித்தனமாக தாக்குதல் இனிமேல் நடைபெறாது

—ஹமில்டன்

விமானக்குண்டுத் தாக்குதல்கள் கண்மூடித்தனமான முறையில் இனிமேல் நடைபெறமாட்டாது என சிறிலங்கா கூட்டுப்படைத் தளபதி ஹமில்டன் வணசிங்கா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்

தனது நேரடியான அங்கீகாரத்துடன் மட்டுமே புலிகளின்

[3 ஆம் பக்கம் பார்க்க]

# தபால் ஊழியர்களின் வரவு திருப்தியாக இல்லை

(யாழ்ப்பாணம்)

கடந்த 25-11-91 இல் பிரகடனம் செய்யப்பட்ட ஊரடங்கு உத்தரவை அடுத்து அத்தியாவசிய சேவையில் ஒன்றான அஞ்சல் சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

கப்பல்மூலம் பெறப்படவிருக்கும் அஞ்சல்களைத் துரிதமாக ஒப்படைக்கவும், நத்தார் புதுவருட கல அஞ்சல்களைப் பரிமாறவும், பொதுப்பரீட்சைகள் தடங்கலின்றி நடைபெறவும் அஞ்சல் சேவை சீராக இயங்குதல் அவசியமாகிறது.

சகல அஞ்சல், உப அஞ்சல் அலுவலகங்களிலும் உத்தியோகஸ்தர், ஊழியர்கள் ஆகியோரின் வரவு திருப்திகரமாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

# திரும்பிய ஆசிரியருக்கு சம்பளம் வழங்கவும்

(நல்லூர்)

வட-கிழக்குமாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றி அசம்பாவிதங்கள் காரணமாக வேறு மாகாணங்களில் கடமையாற்றிய ஆசிரியர்கள் மீளவும் வட - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் பணியை ஆரம்பிக்கும்போது அவர்களுக்கு முன்னர்பெற்ற சம்பளத்தின்படி சம்பளம் வழங்கும்படி வட-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அனைத்துக் கோட்டக்கல்வி உதவிப் பணிப்பாளர்களுக்கும் பணித்

(3 ஆம் பக்கம் பார்க்க)

# ஆனையிறவில் மோதல்; இரு இராணுவம் பலி

ஆனையிறவு முகாம் பகுதியில் புதிய காவலரண் அமைக்க முற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலை புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுக்காலை 7.40 மணியளவில் ஆனையிறவுப் பகுதியில் அமைந்துள்ள புலிகளின் காவலரண் பகுதியை நோக்கி முன்னேறி வந்த இராணுவத்தினர் காவலரண் ஒன்றை அமைக்க முற்பட்டனர். அவ்வேளை அந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் பதுங்கித் தாக்கினர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தொழிலிழந்த மீனவருக்கு ஒருமாத உலர் உணவு

(யாழ்ப்பாணம்]

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் தொழில் இழந்த மீனவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவிருக்கின்றது.

இம்மாவட்டத்தில் உள்ள தொழில் பாதிக்கப்பட்ட சுமார் 5.000 மீனவ குடும்பங்களுக்கு மட்டும் ஆரம்பத்தில் ஒரு மாதம் தொடர்ச்சியாக வழங்கப்படும். இந்த நிவாரண நடவடிக்கையைத் தொடர்ந்து நிலைமையை

(3 ஆம் பக்கம் பார்க்க)

# வடபகுதிக்கு மின்சாரம்; பொறியியல் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு மின்சாரத்தை வழங்குவது தொடர்பான உயர்மட்ட பொறியியல் ஆலோசனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உயர்மட்ட பொறியியல்மற்றும் தொழில்நுட்ப சேவைகள் தொடர்பாக ஆலோசனைகளை மேற்கொள்வதற்காக மின்சார சபையின் வடபிராந்திய முகாமையாளரை கொழும்புக்கு வரும்படி அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

வடபகுதிக்கு மின்சார இணைப்பை வழங்கும் உயர்சக்தி தொடர்புகேபிள்களில் மாங்குளம், ஆனையிறவு ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட சேதங்களை புனரமைப்பதற்கு உயர் பொறியியல் சேவை தேவைப்படுவதால் இச்சேவையை

(4 ஆம் பக்கம் பார்க்க)

தொண்டர் ஆசிரியர்

# நிரந்தர நியமனம் தற்போதைக்கு இல்லை

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர நியமனமாக்கும் வேலைகள் தற்போதைக்கு நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

மேற்படி நியமனங்களை வழங்குவதாயின் நாடு முழுவதிலும் இராணுவ, அரசியல் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்றும் இந்த நியமனத்தில் மேற்படி இருகாரணிகளும் நெருக்கமான செல்வாக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பதவி உயர்வு இல்லை; சிற்றூழியர் ஆட்சேபம்

(கொழும்புத்துறை)

சிற்றூழியர் தரம் 3இல் பதினொருவருடங்களாகச்சேவையாற்றிய போதும் தரம் 2இற்கான பதவி உயர்வு வழங்கப்படாது, அமைய ஊழியர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக யாழ் செயலகத்தைச் சேர்ந்த மூன்றாந்தர சிற்றூழியர்கள் உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளருக்கு ஆட்சேபம்தெரிவித்து மகஜர் அனுப்பி வைத்துள்ளனர்.

யாழ். செயலகத்தில் சிற்றூழியர் தரம் மூன்றில் நியமனம் பெற்று பதினொரு வருடங்களாகச் சேவையாற்றி வருகிறோம். சிற்றூழியர் தரம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

...தாக்குதல்

[நமது நிருபர்]

ஊர்காவற்றுறைப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் பொன்னாலை மற்றும் திருவடிநிலப் பகுதிகளை நோக்கிக் கடும் எறிகணைத் தாக்குதலை நடாத்தியுள்ளனர்.

]4 ஆம் பக்கம் பார்க்க]

# அரசின் நடவடிக்கை; யாழ். அ. அதிபர் திருப்தி

(யாழ்ப்பாணம்)

அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளை அறிந்ததும் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திருப்தி தெரிவித்தார். இவ்வாறு கடந்த இருபத்திரண்டாம் திகதி கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் தயாரத்னா குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் பேசுகையில் மூன்று தினங்களுக்கு முன்பு கொழும்பில் யாழ். அரசாங்க அதிபர் இருந்ததாகவும், அப்போது உணவு தட்டுப்பாடு பற்றியும் கூறினாரெனவும் தெரிவித்தார். எனினும் அரசாங்கம்

[4 ஆம் பக்கம் பார்க்க)

# அரச சார்பற்ற நிறுவனம்; கப்பலில் இடமில்லை

வடபகுதிக்குக் கப்பல் மூலம் அத்தியாவசிய உணவுப் பொருள்களைத் தனியார் நிறுவனங்கள் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் எடுத்து வருவதற்குக் கூட்டுப்படைகளின் தலைமையலுவலகம் முற்றாக அனுமதி மறுத்துள்ளது.

(க.லோ)

# விவசாயிகளுக்கு மண்ணெய்

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு "ஹெயர்" ஸ்தாபனம் மண்ணெண்ணெயை வழங்கவிருக்கிறது. இந்த ஸ்தாபனத்திற்கென 500 பீப்பா மண்ணெண்ணெய் கப்பல் மூலம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அரச சார்பற்ற நிறுவனங்களை சிறிலங்கா மிரட்டுகிறது

## அனைத்துலக நீதிபதிகள் ஆணைக்குழு

(ஜெனீவா)

இலங்கையில் அமைந்துள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் விபரங்களை மீள்பரிசீலனை செய்யும்படி இலங்கை அரசை அனைத்துலக நீதிபதிகள் ஆணைக்குழு கேட்டுள்ளது. ஜெனீவாவைத் தலைமையகமாக கொண்டுள்ள இச்சபை சென்ற வாரம் வெளியிட்ட அறிக்கையொன்றில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது இச்சபையை சேர்ந்த நீதிபதிகள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

எவர்சில்வர், பித்தளை, பிளாஸ்ரிக், அலுமினியம்
கண்ணாடிப்பாத்திரங்கள் பளிச்சௌத் துலங்கிட

நிம்

மில்க்வைற் தரும் மற்றுமோர் வேம்பின் தயாரிப்பு
"மில்க்வைற் நிம்"
உள்ளூர் உற்பத்திக்கே ஆதரவு தாருங்கள்.
(B/3549)

பச்சிலைப்பள்ளி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் - பளை
(மட்டுப் படுத்தப் பட்டது)

## பதவி வெற்றிடம்

பதவி:- கணக்காளர்
சம்பளத் திட்டம்:- 104 : 7 9க்கு அமைய
1165 - 2170
--------------
60X3-75X11 (இரைபடிகளும்)

தகைமை:-

(அ) கூட்டுறவுப் பணியாளர் 8ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்கு / கணக்காய்வு இலிகிதர் பதவியில் 2 வருடத்திற்கு குறையாத அனுபவம். அல்லது,

(ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்கு பதிவாளர் இடை நிலைப் பரீட்சையிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குத் துறையிலான 2 வருட அனுபவம் அல்லது.

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் [உயர்தரப்]. க.பொ.த. உயர்தரத்தில் கணக்கியலை உள்ளடக்கிய மூன்று பாடங்களிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்கியல் தொடர்பான துறையில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம்

வயது:- 21-40 வயதுக்கு உட்பட்டவர்கள்

விண்ணப்ப முடிவுத்திகதி:- 10 . 12 . 1991

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
'தலைவர்'
பச்சிலைப்பள்ளி
தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக்
கூட்டுறவுச்சங்கம்
பளை.
[R-1968]

பருத்தித்துறை நகராட்சி மன்றம்

## 1992ஆம் ஆண்டுக்கான ஆதனவரி அறிவித்தல்

ஆதன வரிமதிப்புக்களையைாக, இவ்வாண்டு நடைமுறையிலுள்ள ஆதன வரித் தொகைகளே 1992ஆம் ஆண்டுக்கும் அவ்வாதனங்களுக்குச் செலுத்தப்படல் வேண்டுமென வரியிறுப்பாளர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது;

இவ்வாதன வரித்தொகைகள் 1992ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31, யூன் மாதம் 30, செப்டம்பர் மாதம் 30, டிசம்பர் மாதம் 31 ஆகிய திகதிகளில் முடிவுறும் காலாண்டுக்கு ஒரு தடவை செலுத்தப்பட வேண்டும். இவை ஆண்டுத் தொடக்கத்தில் முழுமையாகவும் செலுத்தப்படலாம். 1992ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் ஆண்டின் முழு ஆதன வரியையும் செலுத்தினால் 10வீத வரிக்கழிவும் காலாண்டுக்குரிய ஆதன வரியை அக்காலாண்டின் முதலாம் மாதத்தில் செலுத்தினால் 5வீத வரிக்கழிவும் வழங்கப்படும்.

காலாண்டு முடிவுறும் திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் ஆதன வரித் தொகைகளுக்குப் பற்றாணைச் செலவு அறவிடப்படும். இப்பற்றாணைச் செலவு வெற்றுக் காணிகளுக்கும், குடியிருக்கும் ஆதனங்களுக்கும் 15 வீதமாகவும், ஏனைய ஆதனங்களுக்கு 20 வீதமாகவும் இருக்கும்.

அறிவிக்கப்பட்ட வரிமதிப்புக்கு எதிர்சொல்லுதல் ஏதுமிருப்பின், அவை ஒவ்வொரு ஆதனத்திற்கும் தனித்தனியாக இவ்வறிவித்தல் கொடுத்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் இந்நகராட்சி மன்ற அலுவலகத்தில் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேற்காட்டியபடி காலாண்டு முடிவுறும் திகதிகளிலோ அல்லது அதற்கு முன்னரோ அக்காலப் பகுதிக்குரிய ஆதனவரி செலுத்தப்படா விட்டால், குடியிருப்போரின் பொருட்கள் கைப்பற்றல் செய்யப்படும் என்பதைக் குடியிருப்போர் கவனிக்க வேண்டும். வாடகைக்காரர்கள் தாங்கள் குடியிருக்கும் ஆதனங்களுக்குரிய வரியைச் செலுத்தி, அத்தொகையை வாடகையில் குறைத்துக் கொள்ளலாம்.

க. சண்முகநாதன்
செயலாளர்,
நகராட்சி மன்றம்,
பருத்தித்துறை

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.
28.11.1991
[B-3552]

## சிங்களத்தில் இருந்ததால் விவாதம் ஒத்திவைப்பு

தனிச் சிங்களத்திலேயே வரவு செலவுத் திட்டம் இருந்ததால் வரவு செலவு திட்ட விவாதம் பின்போடப்பட்டது.

சபை உறுப்பினர் என். செல்வராசா, எல்லாமே சிங்களத்தில் இருப்பதாகவும், வரவு செலவுத் திட்டம் தமிழில் இல்லையென்றும், மொழி புரியாமல் வரவு செலவுத் திட்டம் தொடர்பாகத் தமக்கு எதுவும் கூற முடியவில்லை என்று கூறினார்.

வேறொரு திகதிக்கு விவாதத்தை ஒத்திவைத்த தலைவர் தமிழ் மொழி பெயர்ப்பு கொடுக்கவும் சபையில் உறுதி தெரிவித்தார்.

## வெளிவாரிப் பட்டப் படிப்புகள்

இலங்கைப் பல்கலைக் கழகங்களின் (வெளிநிலை)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



விரஜனனம்
23-06-70
வீரமரணம்
30 11-90

வீரவேங்கை
யேக்கா
(தம்புத்துரைச்சாமி
- சிதாலட்சுமி
(சிதா)
(மயிலிட்டி)

எம் இனத்திற்காக - மடிந்த
தியாகச் சுடரே
உன் ஒளி என்றென்றும்
ஈழத்தில் அணையாது
நீ சென்ற பாதையில் - நாம்
அணிதிரண்டு ஈழத்தை மீட்போம்
உன் கனவுகள் நனவாகும்
விரைவில் தமிழீழம் மலரும்

வீரமாணிக்கதேவன்துறை - குடும்பத்தினர்
மயிலிட்டி,
காங்கேசன்துறை.
(R-1952)

## நினைவு கூருகின்றோம்

1991 - 11 - 30





லெப். ஜோன்சன் பத்மப்பிரியா

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகள்.

1985 ஆம் ஆண்டு கொழும்பு பனாகொடை இராணுவத் தலைமையகத்தில் இருந்து தப்பிச்செல்கையில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவு எய்திய

லெப். யோசப் [கணபதிப்பிள்ளை நாகராசா

## பதவி வெற்றிடம்

பதவி:- கணக்காளர்

சம்பளத் திட்டம்:- 104 : 7 9க்கு அமைய

1165 - 2170

---

60X3-75X11 (இரண்டிலும்)

தகைமை:-

(அ) கூட்டுறவுப் பணியாளர் 8 ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்கு / கணக்காய்வு இலிகிதர் பதவியில் 2 வருடத்திற்கு குறையாத அனுபவம், அல்லது,

(ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்கு பதிவாளர் இடை நிலைப் பரீட்சையிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குத் துறையிலான 2 வருட அனுபவம் அல்லது,

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் [உயர்தரம்]. க.பொ.த. உயர்தரத்தில் கணக்கியலை உள்ளடக்கிய மூன்று பாடங்களிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்கியல் தொடர்பான துறையில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம்

வயது:- 21-40 வயதுக்கு உட்பட்டவர்கள்

விண்ணப்ப முடிவுத்திகதி:- 10 . 12 . 1991

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

'தலைவர்'

பச்சிலைப்பள்ளி

தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்கம்

பளை.

[R-1968]

---

அறிவிக்கப்பட்ட வரிமதிப்புக்கு எதிர்சொல்லுதல் ஏதுமிருப்பின், அவை ஒவ்வொரு ஆதனத்திற்கும் தனித்தனியாக இவ்வறிவித்தல் கொடுத்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் இந்நகராட்சி மன்ற அலுவலகத்தில் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேற்காட்டியபடி காலாண்டு முடிவுறும் திகதி களிலோ அல்லது அதற்கு முன்னரோ அக்காலப் பகுதிக்குரிய ஆதனவரி செலுத்தப்படா விட்டால், குடியிருப்போரின் பொருட்கள் கைப்பற்றப்பட்டு விற்கப்படும் என்பதைக் குடியிருப்போர் கவனிக்க வேண்டும். வாடகைக்காரர்கள் தாங்கள் குடியிருக்கும் ஆதனங்களுக்குரிய வரியைச் செலுத்தி, அத்தொகையை வாடகையில் குறைத்துக் கொள்ளலாம்.

க. சண்முகநாதன்
செயலாளர்,
நகராட்சி மன்றம்,
பருத்தித்துறை

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.
28.11.1991

[B-3552]

---

# சிங்களத்தில் இருந்ததால் விவாதம் ஒத்திவைப்பு

தனிச் சிங்களத்தில் உண்டான வலைப்பிரதேச சபை வரவு செலவுத் திட்டம் இருந்ததால் வரவு செலவு திட்ட விவாதம் பின்போடப்பட்டது.

சபை உறுப்பினர் எஸ். செல்வராசு, எல்லாமே சிங்களத்தில் இருப்பதாகவும், வரவு செலவுத் திட்டம் தமிழில் இல்லையென்றும், மொழி புரியாமல் வரவு செலவுத் திட்டம் தொடர்பாகத் தமக்கு எதுவும் கூற முடியவில்லை என்று கூறினார்.

வேறொரு திகதிக்கு விவாதத்தை ஒத்திவைத்த தலைவர் தமிழ் மொழிபெயர்ப்பு கொடுக்கவும் சம்மதித்துக் கொண்டார்.

---

## வெளிவாரிப் பட்டப் படிப்புகள்

இலங்கைப் பல்கலைக் கழகங்களின் (வெளிநிலை)
பட்டப்பாட நெறிகளான

கலை முதற் தேர்வு [G. A. Q]

விஞ்ஞான முதற் தேர்வு [G. S Q]

வணிக முதற் தேர்வு [First in Commerce]

க.பொ.த உயர்தரம் எந்தப் பிரிவாயினும் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்

இதுவரை பல்கலைக் கழகத்தில் பதிவு செய்து கொள்ளாத மாணவர்கள் உடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்

விண்ணப்ப முடிவுத் திகதி 20 - 12 - 1991

விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன

உதவிப்பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி

148/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு:- பட்டப்படிப்புகளுக்கென தனித்துவமாக இயங்கும் ஓரே ஒரு நிறுவனம் யாழ்நகரில் இதுவே

(B/ 3551)

---

## வரி விளம்பரம்

**பழைய புத்தகங்கள்**

தங்களிடமுள்ள புத்தகங்கள், சஞ்சிகைகள் பத்திரிகைகள் நியாயமான விலையில் கொள்முதல் செய்யப்படும். யாழ் பழைய புத்தகக் கடை, 82, அருச்சுனா (ஸ்ரான்லி) வீதி. (R/1954)

**தவறிவிட்டது**

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் எனது 801240392V இலக்க அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சி. செல்வரத்தினம் ஆசிரியர் சிறுப்பிட்டி மேற்கு நீர்வேலி என்னும் முகவரியில் அல்லது ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (R/1967)

**தவறிவிட்டது**

கொடிகாமம் சந்தைக்கும் மிருசுவிலுக்கும் இடையில் ஞானமணி சுவிசெல்த் 269, வடகரை வீதி திருகோணமலை என்னும் அடையாள அட்டை தவறிவிட்டது கண்டெடுத்தவர் தயவு செய்து "கண்ணன் கபே", கொடிகாமத்தில் ஒப்படைக்கவும். (R/1970

---

பயிலட்டி,
காங்கேசன்துறை. (R-1952)

---

# நினைவு கூருகின்றோம்

1991 - 11 - 30





லெப். ஜோன்சன் பத்மப்பிரியா

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப் பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1985 ஆம் ஆண்டு கொழும்பு பலாலி இராணுவத் தலைமையகத்தில் இருந்து தப்பிச்செல்கையில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவு எய்திய

லெப். யோசப் [கணபதிப்பிள்ளை நாகராசா
- பொத்துவில், அம்பாறை]

லெப். ஜோன்சன் [ஜானதீன் - ஒட்டமாவடி,
மட்டக்களப்பு]

1987 ஆம் ஆண்டு 8 ஆம் பிட்டியில் தேசவிரோதிகளின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவு எய்திய

இரத்தினம் [சந்தையா சகாகுலநாதன் -
வேரவில், பூநகரி]

மட்டக்களப்பில் இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழ்ப் பெண்.

திருக்கோணமலை, மூதூர்ப் பகுதியில் சிறிலங்கா காவல் துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 7 தமிழர்கள்

1988 ஆம் ஆண்டு சவுக்கடியில் பாம்பு கடித்ததின் காரணத்தினால் சாவடைந்த

செல்வா [வேல்நாயகம் சந்திரராசா - கல்முனை,
அம்பாறை]

உரும்பராய் கோப்பாய் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1990 ஆம் ஆண்டு மாவிட்டபுரத்தில் சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவு எய்திய

பத்மப்பிரியா [சுசீர்தா வன்னியசிங்கம் -
17/11, நாவலடி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்]

ஜேக்கா [சிதாலட்சுமி தம்புத்துரைச்சாமி -
வீரமாணிக்கதேவன்துறை, மயிலிட்டி]

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

(B/3547)

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

## ❀ சிந்தனைக்கு ❀

செயலுக்கு உகந்ததாக அமையாத பேச்சு, அடியோடு அடக்கப்படுவதே நல்லது.

— தாமஸ் கார்லைல்


# ஈழநாதம்

மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 30-11-1991
தொலைபேசி
ஆசிரியர்பீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05


# திராவிடத்தை தி.மு.க. காப்பாற்றுமா?

தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரானவை என ஆரம்பித்த பொலிஸ் நடவடிக்கைகள் படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டு முழு இலங்கைத் தமிழருக்கு எதிராகவும் பின்னர் தமிழகத்தில் முதலமைச்சர் ஜெயலலிதாவின் அரசியல் எதிரிகளுக்கு எதிராகவும் திசை திருப்பப்பட்டுள்ளது. இதன் முதற் கட்டமாக தி மு. க. தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அடுத்த கட்ட நடவடிக்கையாக தி. மு க. ஆட்சிக்காலத்தில் முக்கிய பதவி வகித்த முன்னாள் உள்துறைச் செயலாளர் ஆர் நாகராஜன் கைதுசெய்யப்பட்டுள்ளார். அத்தோடு தி. மு க வைச்சேர்ந்த வீ ர சேகரன் போன்ற வழக்கறிஞர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் இந்நடவடிக்கைகள் மேலோட்டமாக விடுதலைப் புலிகளுக்கும் தமது அரசியல் எதிரிகளுக்குமான நடவடிக்கையாக விமர்சிக்கப்பட்டாலும் அதன் பின்னணி பலமானதாகும். தென்னிந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டில் கடந்த மூன்று தசாப்தங்களாக நிலவி வந்த திராவிடர் ஆதிக்கத்தை இல்லாது ஒழித்தலே அதன் பிரதான இலக்காகும். இதற்கு தமிழ் நாட்டில் உள்ள பலம் பொருந்திய பிராமண சக்திகள் மட்டுமல்ல இந்திய மத்திய அரசில் செல்வாக்குச் செலுத்தும் பலம் பொருந்திய பிராமண ஆதிக்க சக்திகளும் பின்னணியில் உள்ளன.

இந்நிலையில் தி மு. க. வின் அரசியல் முடிவுகள் முக்கியமானவையாகும் திரு நாகராஜன் தொடர்பாக அ தி மு க வின் போக்கை தி மு க. கண்டனம் செய்துள்ளது. ஆனால் தி மு. க வின் கண்டனம் மட்டும் நெருக்கடியில் இருந்து அக் கட்சியையோ திராவிட மக்களையோ காப்பாற்றிவிடப் போவதில்லை. இதே வேளை தி. மு க. வின் ஏனைய செயற்பாடுகளும் திருப்திகரமானதாகத் தெரியவில்லை.

அண்மையில் தி. மு க தலைவர் மு கருணாநிதி அவர்கள் விடுத்த அறிக்கையில் விடுதலைப் புலிகளுக்கு யார் முதலில் ஆதரவு கொடுத்தது? யார் கூடுதல் ஆதரவு கொடுத்தது? ஜெயலலிதா விடுதலைப் புலிகளைப் பாராட்டிப் பேசியது பற்றிய குறிப்புக்கள் கொண்ட ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளார். அத்தோடு திரு வை. கோபாலசாமியை கட்சியில் இருந்து விலகும்படி தி மு க. செயற்குழு கோரியிருப்பதாகவும் ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் இன்று தி மு. க. விற்கோ அன்றி தமிழக மக்களுக்கோ தேவைப்படுவது அதுவல்ல. இந்திய மத்திய அரசிலும் தமிழகத்திலும் செல்வாக்குச் செலுத்தும் பிராமணியத்திற்கும் எதிரான நடவடிக்கையே ஆகும்.

தமது ஆட்சி அதிகாரத்தைப் பாதுகாப்பதற்காக திரு. மு. கருணாநிதி பலமேதுமற்ற சந்திரசேகரிடம் மண்டியிட்டது - ஏமாந்ததுபோல் தொடர்ந்தும் அரசியல் போக்கில் நழுவல் தன்மையும், பலவீனமான முடிவுகளையும் மேற்கொள்வாரேயானால் தி. மு. க வின் அரசியல் எதிர்காலம் கேள்விக்குரியதாகவே மாறிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

ஆகையினால் இன்று தி மு க. வின் பணி தமிழக மக்களை பிராமணியத்தின் ஆதிக்கத்தில் இருந்து பாதுகாப்பதேயாகும். இதனை தி. மு. க. செய்ய முடியாவிட்டால் இதற்கான பணியை இளைய தலைமுறையினரிடமாவது விட்டு விட்டு ஒதுங்கிக்கொள்ள வேண்டும். இதுவே தமிழக மக்களுக்கு இன்று தேவையாகவுள்ளதாகும்.

# தொண்டமானின் நடவடிக்கைகள் தெரிவுக் குழு செயலுக்கு குந்தகம்

— லஷ்மன் ஜெயக்கொடி

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கென நியமிக்கப்பட்டிருக்கும் பாராளுமன்ற தெரிவுக் குழுவின் செயற்பாடுகளுக்கு குந்தகமாக அமைச்சர் தொண்டமானின் நடவடிக்கைகள் அமைகின்றன என சிறீலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டி. லஷ்மன் ஜெயக்கொடி தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் வரவு — செலவு திட்டம் மீதான குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் வடக்குமாகாணமும், கிழக்கு மாகாணமும் நிரந்தரமாக இணைக்கப்பட வேண்டுமென தொண்டமான் யோசனை தெரிவித்திருக்கிறார் அவர் அமைச்சரவையின் ஒரு உறுப்பினர். அவரின் நிலைப்பாடு தான் அரசாங்கத்தின் நிலைப்பாடா?

வடக்கு - கிழக்கு இணைப்பு தொடர்பாக கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு இலங்கை-இந்திய சமாதான உடன்படிக்கை கூறுகிறது. இந்த உடன்படிக்கையில் இருந்து அரசாங்கம் விலகிவிட்டதா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

தொண்டமான் ஜனாதிபதியின் விசேட தூதுவராகத்தான் இந்தியாவிற்கு சென்றிருந்தாரா என்பதை அறிய விரும்புகின்றோம். எமது நாட்டுப் பிரச்சினைகள் தொடர்பான விவகாரங்களை அதுவும் இச் சபையில் ஆராயப்படவேண்டிய விவகாரங்களை அவர் இந்தியாவில் ஆராய்ந்திருக்கின்றார். தொண்டமானுக்கு இருக்கும் இச்சிறப்புரிமை ஏனைய அமைச்சர்களுக்கு இருக்கிறதா என்றும் ஜெயக்கொடி கேட்டார்.

## வவுனியாவிற்கு நேரடித் தொலைபேசி

(வவுனியா)

வெளிநாட்டு தொலைபேசி அழைப்புக்கள் நேரடியாக வவுனியாவிற்கு வர வாய்ப்புக் கிட்டியுள்ளதாக கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

1987 ஆம் ஆண்டிற்கும் பின்னர் வெளிநாட்டுத் தொலைபேசிகள் நேரடியாக வவுனியாவிற்கு வராது துண்டிக்கப்பட்டிருந்தது.

இப்போது அத்தடை நீக்கப்பட்டுள்ளதாகவும், தொலை தொடர்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது:

## பெரும் போக செய்கைக்கு கிருமி நாசினி போதாது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இவ்வாண்டுக்கான பெரும் போக விவசாயச் செய்கைக்குத் தேவையான கிருமி நாசினி தேவையான அளவில் இல்லை.

நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட உணவு உற்பத்தி சம்பந்தமான கூட்டத்தில் கிருமி நாசினி தேவையான அளவில் இல்லாது இருப்பது பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது.

இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கப்பல் மூலம் விவசாயத்திற்கு தேவையான பீடை நாசினி, கிருமி நாசினி என்பவற்றை எடுத்து வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

இரசாயன, நஞ்சுப்பொருள்கள் என்பன உணவுப் பொருட்களுடன் சேர்ந்து கப்பல் மூலம் இங்கு எடுத்து வருவதில் உள்ள சிரமங்கள் குறித்தும் கருத்துக்கள் பரிமாறப்பட்டது. (எ)

## பாராளுமன்ற உறுப்பினர் தங்குமிடவசதிக்கு 10 கோடி ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதி ஒன்றினை அமைக்க பத்துக் கோடி ரூபாவினை ஒதுக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட உரை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசும் போதே பிரதமமந்திரி டி.பி. விஜயதுங்க இதனைத் தெரிவித்தார்.

## விசேட பொதுக் கூட்டம்

யாழ் மாவட்டத்தில் கல்வித் திணைக்களம் தவிர்ந்த அனைத்து திணைக்களங்களிலும் பணிபுரியும் பட்டதாரிப் பயிலுனர்களுக்கான விசேட பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9. 30 மணிக்கு யாழ் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முக்கியமான பல தீர்மானங்கள் எடுக்கப்பட இருப்பதால் அனைத்துப் பட்டதாரிப் பயிலுனர்களையும் தவறாது சமூகம் கொடுக்கும்படி தலைவர் வி. ரகுராகவன் கேட்டுக் கொள்கின்றார்.

## பணமாக ஒய்வூதியம்

வேலணை ப. நோ. கூ. சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான நவம்பர் மாதத்திற்கான ஓய்வூதியக் கொடுப்பனவு காசாக வழங்கப்படுகிறது. (ஈ)

## கொடிகாமத்தில் மக்கள் லெப்.கணேசிற்கு அஞ்சலி

(கொடிகாமம்)

ஆனையிறவுப் பகுதியில் 21-7-91 அன்று காயமுற்று மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று கடந்த புதன் கிழமை வீரமரணம் அடைந்த லெப்டினன்ட் கணேஸ் (சாம்பசிவம், தயானந்தன் இரண்டாம் குறிச்சி மண்டுவில்) ஊட்ட திகள்முடன் தேற்று முன்தினம் வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு கொடிகாமம் சந்தையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இராதபுகழுடலுக்குபெருந்திரளான மக்கள் மலர்தூவி அஞ்சலியைச் செலுத்தினர். இதன் பின்பு தென்மராட்சி மாணவர் இயக்கப் பொறுப்பாளர் திரு. புரட்சியின் தலைமையில் அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது.

இவ் அஞ்சலிக்கூட்டத்தில் யாழ்.மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மாறன் தென்மராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு சந்திரமான் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்தினார்கள் பின்பு இந்த மாவீரனது புகழுடல் இராணுவ மரியாதையுடன் கொடிகாமம் சந்தையில் இருந்து மாவீரர் துயிலும் இடத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. (86)

## கண்மூடித்தனமாக

இலக்குகள் மீது விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெறும் என்றும்,

பிரிவினைவாத அரசியல் கொள்கைகள் தமிழ்மக்களுக்கு எந்த விதத்திலும் உதவ மாட்டாது என்பதனால் யாழ் குடா நாட்டிலுள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் அராஜகத்திற்கு எதிராக போர் தொடுத்தால் எல்லாம் நன்றாகவும், சிறந்ததாகவும் இருக்கும் என்றும்,

விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து தமிழ் மக்களை விடுவிப்பதான தமது முயற்சிக்கு தமக்குத் தேவையான சகல ஒத்துழைப்பையும் ஆதரவையும் தமிழ் மக்கள் தரவேண்டும் என்றும்,

நாங்கள் ஒரு பகுதியினரை மட்டுமல்ல நாட்டு மக்கள் அனைவரையும் பாதுகாக்க வேண்டும் என்ற உண்மையை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் ஹமில்டன் வனசிங்கா தனது பேட்டியில் தெரிவித்துள்ளார்.

## அரியாலை

லங்கா அரச படைகள் பூம்புகார், நாவலடி பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதனால் ந. கேஸவர் (வயது 24) சுதர்சன் (வயது 10) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

இரண்டு நாட்களாக இப் பகுதிகளில் சிறிலங்கா அரச படைகள் மேற்கொண்டுவரும் தாக்குதல்களினால் இப் பகுதி மக்கள் இடம் பெயர்ந்து பாரதி வித்தியாலயத்திலும் வேறு இடங்களிலும் தங்கியுள்ளனர். (க,43)

## தொழிலிழந்த

மீளாய்வு செய்து மேலும் ஒவ்வொரு மாதங்களுக்கும் நிவாரண விநியோகத்தை நீடிப்பது பற்றித் தீர்மானிக்கப்படவிருக்கின்றது.

(ஈ) (லோ)

## திரும்பிய

துன்பச் சேவை மேலும் அவர்களுக்குச் சம்பள உயர்வும் வழங்க வேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 1990 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக இடம்பெயர்ந்து சென்ற கல்வித் திணைக்கள ஊழியர்களும், ஆசிரியர்களும் மீண்டும் கடமைக்குச் சமூகமளித்தால், சமூகமளிக்காத காலத்திற்கு அவர்களுக்குச் சொந்த விடுமுறை இருப்பின் அதற்கெதிராக சமன்செய்யும் படி பணிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள காலத்திற்குச் சம்பளமற்ற விடுதலை வழங்கும் படியும் பணிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக வட - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள வேண்டாம் என்றும் கோரப்பட்டுள்ளது.

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

எமது தாயகத்தின் அவலங்களையும், நெருக்கடிகளுக்கு மத்தியிலும் நாங்கள் நிமிர்ந்து நிற்கும் அழகையும் எமது போராட்டத்தின் உறுதியையும் உலகெங்கும் எடுத்துச் சென்று உணர்த்தக்கூடிய ஓவியங்களை எமது ஓவியர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் நோக்குடன் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடல் எதிர்வரும் 07-12-91 அன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கோண்டாவிலிலுள்ள விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழக தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சகல ஓவியக்கலைஞர்களையும், வளர்ந்துவரும் ஆரம்ப ஓவியர்களையும், ஓவிய ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம் அழைப்பு விடுத்துள்ளது.

# உக்கிரேனுக்கு அங்கீகாரம்; அமெரிக்கா ஆராய்வு

சோவியத் குடியரசுகளில் ஒன்றான உக்கிரேன் குடியரசை அமெரிக்கா தனிநாடாக அங்கீகரிக்கவுள்ளது இதுபற்றி அமெரிக்கா ஆராய்ந்துவருவதாகச் சொல்லப்படுகிறது

சோவியத் குடியரசுகள் ஒவ்வொன்றும் தனிநாடாக மாறுவதை ஆதரிக்காத அமெரிக்கா இப்போது தனது கொள்கையை மாற்றிக்கொள்ளவிருக்கிறது.

இதேவேளை யூகோஸ்லாவியாவிலிருந்து பிரிந்துள்ள சுலோவேனியாவையும் மற்றும் குரோஷியாவையும் தனி நாடாக அங்கீகரிக்கப்போவதாக இத்தாலியும், ஜேர்மனியும் கூட்டாக அறிவித்துள்ளன.

---

ஸ்ரீதர் திரையரங்கில்

அல்ஜீரிய நாட்டு

## விடுதலைப் போராட்டம்

(தமிழாக்கம் செய்யப்பட்டது)

தினசரி 4.00 மணிக்கும்

சனி, ஞாயிறுகளில் 4, 6 மணிக்கும்

காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன.

(B/3556)

---

## அரசாங்க அறிவித்தல்

### இடம்பெயர்ந்த சுகாதாரத் திணைக்கள ஊழியர்கள்

தீவக வைத்திய நிறுவனங்களிலிருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்துவந்து, குடாநாட்டிலுள்ள வேறு நிலையங்களில் தற்காலிகமாகப் பணியாற்ற அனுமதிக்கப்பட்ட, வைத்திய அதிகாரிகள், பதிவு வைத்திய அதிகாரிகள், உதவி வைத்திய அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய ஊழியர்கள் யாவரும் திரும்பவும் தீவகங்களிலுள்ள தமது வைத்திய நிறுவனங்களுக்கு உடனடியாகச் சென்று பணிபுரியுமாறு பணிக்கப்படுகின்றார்கள்.

இவர்களை உடனடியாக விடுவித்து இப்பணிமனைக்கு அறியத்தருமாறு, இவர்கள் தற்போது பணிபுரியும் நிறுவனத்தலைவர்கள் கோரப்படுகின்றார்கள்.

ந. கனகசபை,
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(B/3553)

---

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆண்டு 6 அனுமதி பெறுவதற்கான பிரவேசப் பரீட்சை — 1992

01. இப்பரீட்சை 28-12-1991 இல் நடைபெறும்.
02. தற்போது ஆண்டு 5 இல் கல்விகற்கும் மாணவர்களும், 01-02-1981 ஆம் திகதிக்குப் பின்னர் பிறந்தவர்களும் மட்டுமே இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவர்களாவர்.
03. பிரவேசப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் ரூபா 45/- (நாற்பத்தைந்து) செலுத்தி 02-12-1991 தொடக்கம் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
04. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் இக் கல்லூரியில் நேரில் 14-12-91 (சனிக்கிழமை) முன்னதாகக் கையளிக்கப்படல் வேண்டும். (14-12-91 ஆம் திகதிக்குப் பின்னர் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)
05. இக்கல்லூரியால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த வேறு விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
06. கிடைக்கப்பெற்ற விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சைப் பிரவேசப் பத்திரங்களை கல்லூரியில் 24-12-1991 செவ்வாய்க் கிழமை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

30-11-91

அதிபர்
யாழ். இந்துக்கல்லூரி
யாழ்ப்பாணம்.

(B/3548)

---

வடபகுதிக்கு

வழங்குவது பற்றி வடபிராந்திய முகாமையாளர் மின்சார சபைத் தலைவருடனும் கூட்டுப்படைகள் தலைமை அலுவலக அதிகாரிகளுடனும் பேச்சு நடாத்தி சில முடிவுகளை எடுக்க வேண்டியிருப்பதால் அவர் கொழும்புக்கு அழைக்கப்பட்டிருப்பதாக தெரிகிறது

---

அரசின்

எடுக்கும் நடவடிக்கைகளை அறிந்ததும் யாழ். அரச அதிபர் திருப்தி தெரிவித்தார் என்றார்.

---

நிரந்தர

சேவைச் செலுத்திவருவதால் இந்த நியமனங்களை வழங்குவதில் பல சிரமங்கள் உள்ளதாக கல்விச் சேவைகள் ஆணைக்குழுத் தலைவர் கருதுகின்றார். இதனால் நாடு முழுவதிலும் இந்த நியமனங்கள் வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. (ஈ)

---

எறிகணை

திருவடி நிலைப் பகுதியில் கடலில் நிலைகொண்டிருந்த பீரங்கிப் படகொன்றும் பீரங்கித் தாக்குதல்களை நடாத்தியது. செந்தாங்குளம் பகுதியில் வீழ்ந்து வெடித்த பீரங்கிக் குண்டுகளால் சில வீடுகள் சேதமாகியிருக்கின்றன.

---

பதவி

இரண்டிற்கு உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது விண்ணப்பித்துப் பல சிரமங்களின் மத்தியிலும் கொழும்பு சென்று நேர்முகப்பரீட்சைக்கு தோற்றினோம். அதில் எமக்கு அப்பதவி உயர்வு வழங்கப்படவில்லை என்றும்,

ஆனால் அரசாங்க அதிபரின் பரிபாலனத்திற்குட்பட்ட அமைய ஊழியர்களுக்கு வடகிழக்கு மாகாண அரசினால் ஒரேதடவையில் சிற்றூழியர் தரம் இரண்டு பதவி உயர்வும் நிரந்தர நியமனமும் வழங்கப்படவுள்ளது. எனவே நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு வழங்கி எமது வெற்றிடத்தில் அமைய ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்றும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

---

ஆனையிறவு

இதன்போது இராணுவத்தரப்பில் ஒருவர் காயமடைந்தார். இதனைத் தொடர்ந்து புலிகளின் காவலரணுக்கு முன்னால் பதுங்கு குழி அமைக்கும் வேலையில் காவலரண் அமைக்க இராணுவத்தினர் முற்பட்டபோது அவர்கள் மீது புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர். இத்தாக்குதலின்போது இரண்டு இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

---

கிழக்கில்

மோதல் ஏற்பட்டதாக தெரிவித்தது. இம்மோதல் தொடர்ந்தும் இடம்பெறுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

இம்மோதலின்போது புலிகளின் கண்ணி வெடியில் சிக்கிய இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவித்தன.

---

தபால்

இன்மையால் சேவைகள் மட்டுப்படுத்தவும், அலுவலகங்கள் மூடப்படவும் காரணமாக அமைவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுநன்மைசேவையினை கருத்திற்கொண்டு 22-7-91 நிகழ்ந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கமைய யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல தரத்திலுள்ள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரையும் உடனடியாக தமது கடமைக்குச் சமூகமளிக்குமாறு பதில் மாகாண அஞ்சல் அதிபட்சகர் ச. சடாட்சரநாதன் கேட்டுள்ளார்.

---

# 65, 000 பரீட்சார்த்திகளுக்கு பிரவேசப் பத்திரம்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் க. பொ. த. சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் 65,000 பரீட்சார்த்திகளுக்கு பிரவேசப் பத்திரம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்த அட்டைகள் அடுத்த செவ்வாய்க்கிழமைக்கு முன் கிடைக்குமென்றும், கிடைக்காதவர்கள் பரீட்சை திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும்படியும் கேட்கப்பட்டுள்ளனர்.

---

அரச

குழு இவ்வருடம் இலங்கைப் பயணம் மேற்கொண்ட பின்னர் அரச சார்பற்ற நிறுவனங்களின் வரையறை திட்டம்பற்றி இலங்கை அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கூறியுள்ளது. 1990ஆம் ஆண்டில் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் பற்றி ஆராய ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது தெரிந்ததே.

இலங்கை அரசு அரச சார்பற்ற நிறுவனங்கள் அவற்றிற்குரிய சட்ட திட்டங்களுக்கு இணங்க செயற்படுவதை ஊக்குவிக்காமல் இவ்வித அமைப்புக்களை அச்சுறுத்தும் பாங்கிலேயே நடந்துவருவதாக இந்த அனைத்துலக நீதிபதிகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன

---

விவசாயிகளுக்கு

எடுத்துவரப்பட்டிருக்கின்றது. இவை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படவிருப்பதாக தெரிகிறது. இந்த ஸ்தாபனத்தினால் எடுத்துவரப்பட்ட மேலும் 500 பீப்பா மண்ணெண்ணெயை யாழ். அரச அதிபர் கடனாகப் பெற்றுக் கொண்டுவிட்டார். என்பது குறிப்பிடத்தக்கது. (க)

---

அரச அதிபர்

நிர்வாகம் தொடர்பான செய்திகள் எவற்றை எமது பத்திரிகை வெளியிட்டிருந்தமை தெரிந்ததே.

இனிமேல் எந்தத் தகவலையும் எமது பத்திரிகைக்குத் தரமுடியாது என்று எமது செய்தியாளர்களிடம் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

---

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 1991 - ஆண்டு 5 புலமைப்பரிசில் அடிப்படையில் ஆண்டு 7 அனுமதி 1992

1991 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்கட்கு மட்டும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 1992 ஆம் ஆண்டுக்குரிய ஆண்டு 7 வகுப்பில் அனுமதி வழங்கப்படவுள்ளது. இவ்வனுமதிக்கான விண்ணப்பப் படிவத்தைக் கல்லூரி அலுவலகத்தில் கல்லூரி வேலை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவம் பெற வரும்போது புலமைப்பரிசில் பரீட்சை எடுத்த பாடசாலை அதிபரிடமிருந்து மாணவன் புலமைப் பரிசில் பெற்ற புள்ளி, மாணவனின் சுட்டிலக்கம் என்பவற்றையும் உறுதிப் படுத்திக் கொண்டு வரும்படி வேண்டப்படுகிறார்கள்.

30-11-91

அதிபர்
யாழ். இந்துக் கல்லூரி
யாழ்ப்பாணம்.

(B/3548)

---

# மரண அறிவித்தல்

செல்லப்பா

யோசேப்பு இளையதம்பி

பரியோவான் கல்லூரி முன்னாள் ஆசிரியரும் யாழ்ப்பாணக் கல்வி நிலைய ஸ்தாபகருமான செல்லப்பா யோசேப்பு இளையதம்பி காலமானார் அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று 30-11-91 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறோம்.

''அற்புதமனை''
நவாலி தெற்கு
மானிப்பாய்

தகவல்:
பிள்ளைகள்

[R/1969]

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.